# ‘திராவிட மாடல்’ ஆட்சியின் மகத்தான திட்டங்கள்... முதல் பக்கத் தொடர்ச்சி

3 ஆண்டுகளிலும் ரூ.34,609.44 கோடியில் 10 இலட்சத்து 11 ஆயிரத்து 334 குடும்பங்கள் 100 நாள்கள் வேலை செய்து பயன் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நடப்பு நான்காவது ஆண்டில் ரூ.6,359.24 கோடி ஒதுக்கீட்டில் 100 நாள் வேலைகள் நடைபெறுகின்றன.

இத்திட்டம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்படுவதன் மூலம் நீடித்த நிலைத்த வளர்ச்சியின் குறிக்கோள்களான பசியின்மை, வறுமையின்மை, பாலின வேறுபாடின்மை ஆகியவை நம் நாட்டில் எய்தப்படுகிறது.

**நபார்டு - RIDF திட்டம் (NABARD RIDF)**

நபார்டு - RIDF திட்டத்தின் கீழ் (2021 முதல் 2024 வரை), 551 கி.மீ நீளமுள்ள 287 சாலைப் பணிகள் மற்றும் 342 பாலங்கள் மேற்கொள்ள ரூ. 1,554 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 472 கி.மீ நீளமுள்ள 275 சாலைப் பணிகள் மற்றும் 185 பாலங்கள் ரூ. 920 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

**ஊரகச் சாலைகள் மேம்பாடு**

முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (MGSMT), பிரதமமந்திரி கிராமச் சாலைத் திட்டம் (PMGSY), தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TNRRIS) மற்றும் நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகளில் சாலை மேம்பாடு (Peri Urban) ஆகிய திட்டங்களின் கீழ் (2021 முதல் 2024 வரை), 18,899 கி.மீ நீளமுள்ள 14,262 சாலைப் பணிகள் மற்றும் 83 பாலங்கள் மேற்கொள்ள ரூ.9,030 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 13,733 கி.மீ நீளமுள்ள, 11,460 சாலைகள் மற்றும் 22 பாலங்கள் ரூ. 5219 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன

**ரூ. 594 கோடியில் ஊராட்சிகளில் சிறப்புப் பணிகள்**

2021-22 ஆம் ஆண்டிலிருந்து ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகங்கள். ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடம், எரிவாயு தகன மேடை, சாலைகள், பாலங்கள், சிமெண்ட் மற்றும் பேவர் பிளாக் சாலைகள், பேருந்து நிலையம் மற்றும் நிறுத்தம், சமுதாயக்கூடங்கள், மகாகவி பாரதியார் வாழ்வாதார பூங்கா போன்ற மொத்தம் 154 பணிகளை நிறைவேற்றிட ரூ.594 கோடி மதிப்பீட்டில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

**ஊரக வீடு வழங்கும் திட்டங்கள் (Rural Housing)**

தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசால் பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின்கீழ் முந்தைய ஆட்சிக் காலமான 2016-17 முதல் 2019-20 வரையிலும், திராவிட மாடல் ஆட்சிகாலமான 2021-22 ஆம் ஆண்டுகளிலும் மொத்தமாக 7,38, 139 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

2016-17 முதல் 6.5.2021 வரையிலான காலகட்டத்தில் 2,89,730 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 3,30,757 வீடுகள் 7.5.2021 முதல் 3.10.2024 வரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. நிலுவையில் உள்ள வீடுகளும் முடிவடையும் நிலையில் உள்ளன.

**பெரியார் நினைவு சமத்துவபுரம்**

தந்தை பெரியாரின் சமூக சமத்துவ கொள்கைக்குப் புத்துயிரூட்டி அனைத்துச் சமூகத்தினரும் ஒற்றுமையாகவும் சகோதரத்துவத்துடனும் வாழவேண்டும் என்ற நோக்கத்தில் பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம் சுதந்திர தினப் பொன்விழாவையொட்டி 1997ம் ஆண்டில் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

அதன்படி, 1997 முதல் 2001 வரையில் 145 சமத்துவபுரங்கள், 20082011 வரையில் 93 சமத்துவபுரங்கள் என மொத்தம் 238 சமத்துவபுரங்களுக்கு ஆணை வழங்கப்பட்டு அதில் 233 சமத்துவபுரங்கள் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டன.

மீதமுள்ள 5 சமத்துவபுரங்களில் 4 சமத்துவபுரங்களின் பணிகள் முடிக்கப்பட்ட நிலையிலும், விழுப்புரம் மாவட்டம் கொழுவாரி ஊராட்சியிலுள்ள 1 சமத்துவபுரம் பணிகள் முடிக்கப்படாமலும், கடந்த 10 ஆண்டுகளாக மக்களின் பயன்பாட்டிற்கு ஒதுக்கப்படாத நிலையிலும் இருந்தன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 24.6.2021 அன்று மேதகு ஆளுநர் அவர்களின் உரை மீதான விவாதத்தின் போது தமிழ்நாட்டில் கட்டப்பட்ட 238 சமத்துவ புரங்களும் சீரமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, மக்களின் பயன்பாட்டிற்கு ஒதுக்கப்படாத 4 சமத்துவபுரங்கள் உட்பட 149 சமத்துவபுரங்களை முதற்கட்டமாக 2021-22ம் ஆண்டில் சீரமைப்பதற்காக ரூ.194.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முழுவதும் முடிவுற்றது.

மேலும், இரண்டாம் கட்டமாக 2022-2023ம் ஆண்டில் மீதமுள்ள 88 சமத்துவபுரங்களைச் சீரமைக்க ரூ. 67.01 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அப்பணிகளும் முழுவதுமாக முடிவுபெற்றது.

விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியம் கொழுவாரி சமத்துவபுரம் முற்றிலுமாகப் புதுப்பிக்கப்பட்டு 5.4.2022 அன்றும், சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம், கண்ணமங்கலம் பேட்டை ஊராட்சியில் உள்ள கோட்டை வேங்கன்பட்டி சமத்துவபுரம் ஆகியவை முற்றிலுமாகப் புதுப்பிக்கப்பட்டு 8.6.2022 அன்றும் முதலமைச்சர் அவர்களால் மக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டன.

**கலைஞரின் கனவு இல்லம்**

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 202425 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் புதிய கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கு ஒரு வீட்டிற்கு ரூ.3,50,000/- வீதம் மொத்தம் ரூ.3500 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்கூறிய ஒரு இலட்சம் வீடுகளும் தொடங்கப்பட்டு பல்வேறு கட்டுமான நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

**புதிய சமத்துவபுரங்கள்**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆளுநர் உரையின் மீது 24.06.2021 அன்று நடைபெற்ற விவாதத்தின் போது புதிய சமத்துவபுரங்கள் அமைக்கப்படும் என அறிவித்ததன் அடிப்படையில் சமத்துவபுரம் அமைப்பதற்கு போதுமான நிலம் கண்டறியப்பட்ட எட்டு மாவட்டங்களில், மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 8 புதிய சமத்துவபுரங்கள் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டு ரூ,50 கோடி ஒதுக்கீடு செய்து வீடுகள் கட்டும் பணி முழு வீச்சில் நடைபெற்றுவருகிறது.

**ஊரகப்பகுதிகளில் அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட வீடுகளை பழுது பார்த்தல் 2024-25 (RRH)**

பல்வேறு அரசுத் திட்டங்களின் கீழ் 2000 01ஆம் ஆண்டு வரை கட்டப்பட்ட வீடுகளை, ரூ.1954.20 கோடி மதிப்பீட்டில், 2024-25 மற்றும் 2025-26 ஆகிய இரண்டு ஆண்டுகளில் பழுதுபார்க்கும் பொருட்டு ஊரக வீடுகள் பழுதுபார்த்தல் (RRH) திட்டத்திற்கான அரசாணை நிலை எண்:69, ஊ.வ (ம) ஊ.து (மாஅதி1), நாள்:15.03.2024 வெளியிடப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டில், 1,00,466 வீடுகள் ரூ.832.54 கோடி மதிப்பீட்டில் ஓட்டு வீடுகள் மற்றும் சாய்தள வீடுகளுக்கு சிறுபழுதுகள் மற்றும் பெரும்பழுதுகள் என 10,226 பழுதுகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

**நமக்கு நாமே திட்டம் (ஊரகம்)**

ஊரகப் பகுதி மக்களின் சுய உதவி, சுயச்சார்பு எண்ணம் ஆகியவற்றை வலிமைப்படுத்தவும், பரவலாக்கவும் மக்கள் பங்கேற்புடன் கூடிய நமக்கு நாமே திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1997 - 98 ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்காக 2021-22 ஆம் ஆண்டு முதல் நான்கு ஆண்டிற்கு ரூ.450 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை பயன்பாட்டிற்காக 728 கட்டடங்களும், 91 கட்டடங்களும், பொதுமக்கள் பயன்படுத்த பேருந்து நிழற்குடை / பேருந்து நிலையம், கதிரடிக்கும் களம் உட்பட 6,480 பணிகள் எடுக்கப்பட்டு 5,783 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களது தொகுதிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளுக்காக நிலையான சொத்துகளை உருவாக்குவது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், ஒரு தொகுதிக்கு ஒரு ஆண்டிற்கு ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

ஆண்டுக்கு ரூ.702 கோடி வீதம் 2021-22 2022-23, 2023-24 மற்றும் 2024-25 ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ.2,808 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டத்தின் கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பயன்பாட்டிற்காக 5872 கட்டடங்களும் 1245 பிறதுறைக்கான கட்டடங்களும் பொது மக்கள் பயன்பாட்டிற்காக பேருந்து நிழற்குடை / பேருந்து நிலையம் எரிமேடை, சுடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் போன்ற உட்கட்டமைப்புகள் உட்பட 34015 பணிகள் எடுக்கப்பட்டு26,338பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டமானது 1993ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டு, ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதில் உள்ள இடைவெளிகளை நிரப்பிட வழிவகை செய்கிறது.

2021-22 ஆண்டிற்கு ரூ.2 கோடியும் 2022-23, 2023-24, மற்றும் 2024-25ஆம் நிதியாண்டில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு ரூ.5 கோடி வீதம் என்ற நிதி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பயன்பாட்டிற்காக 1060 கட்டடங்களும் மற்றும் 333 பிறதுறைக்கான கட்டடங்களும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பேருந்து நிழற்குடை / பேருந்து நிலையம் மற்றும் கதிரடிக்கும் களம் ஆகிய 498 பணிகளும் உட்பட 7,467 பணிகள் எடுக்கப்பட்டு 6,156 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)**

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின்கீழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாப்பான கழிப்பறை வசதிகள் பெரும் பொருட்டு 2021-22இல் இருந்து இதுவரை 2,43,770 குடும்பங்களுக்கு கழிப்பறைகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள் மற்றும் பிறகுடியிருப்புகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு கழிப்பறை கட்ட போதிய இட வசதி இல்லாத காரணத்தினால் அந்தக் குடியிருப்புகளுக்கு 5,110 சமுதாய சுகாதார வளாகங்கள் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளன.

**நம்ம ஊரு சூப்பரு பிரச்சாரம்:**

நம்ம ஊரு சூப்பரு Namma Ooru Sooperu’ சுகாதாரம் மற்றும் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் கிராமப்புற சமூகத்தினரிடையே நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தவும், அதை நிலைநிறுத்தவும் சிறப்புப் பிரச்சாரம் ஆகஸ்ட் 15 ஆம் தேதி அனைத்துக் கிராம ஊராட்சிகளிலும் தொடங்கப்பட்டு அக்டோபர் மாதம் 2ம் தேதி வரை நடத்தப்பட்டது.

“நம்ம ஊரு சூப்பரு இயக்கம்” செயல்படுத்தப்பட்டபோது 37 மாவட்டங்களில் ஊரகப் பகுதிகளில் சுமார் 47,339 குப்பை கொட்டும் இடங்கள் 16,829 பொது இடங்கள், 21.775 பள்ளிகள், 22,695 அங்கன்வாடிகள். 45,824 அரசு கட்டடங்கள் / நிறுவனங்கள், 47,949 கிராமப்புற நீர் நிலைகள், 10,011 சமுதாய சுகாதார வளாகம், 15,69,348 மீட்டர் கழிவுநீர் வடிகால்கள் ஆகியவை சுமார் 14,31,591 பணியாளர்களைக் கொண்டு தீவிர துப்புரவு நடவடிக்கைகளில் பங்கேற்றுச் சுத்தம் செய்யப்பட்டன. ஊக்குவிப்பாளர்கள் சுய உதவிக் குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களால் 13,659 பள்ளிகள் மற்றும் 343 கல்லூரிகளில் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு ஒரே வாரத்தில் 4 லட்சம் மரங்கள் நடப்பட்டன.

தீவிர துப்புரவு நடவடிக்கையின் வாயிலாக 2,563.9 டன் கழிவுகள் சேகரிக்கப்பட்டன. இதில் சுமார் 45% கழிவுகள் குப்பைகளைப் பிரிக்கும் கொட்டகைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டும் மீதம் உள்ள கழிவுகள் நுண் உரமாக்கப்பட்டும், உரக்குழிகள் மற்றும் நெகிழி கழிவு மேலாண்மை அலகுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

**ஒன்றிய அரசின் விருது**

ஒவ்வொரு ஆண்டும் ஜல்சக்தி அமைச்சகத்தின் குடிநீர் மற்றும் சுகாதாரத்துறை மூலம் ஊரகப் பகுதிகளில் உள்ள சுகாதாரத்தின் தரம் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பில் அடைந்த முன்னேற்றம் ஆகியவற்றை முக்கிய அளவீடுகளாகக் கொண்டு இந்தியாவிலுள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் தரவரிசைப்படுத்தப்படும். அதன் அடிப்படையில் 2021-22ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சுகாதாரத்திற்கான மதிப்பீட்டில் தேசிய அளவில் தமிழ்நாட்டிற்கு குடியரசுத் தலைவர் அவர்களால் மூன்றாம் இடத்திற்கான விருது வழங்கப்பட்டது.

**ஜல் ஜீவன் திட்டம்**

2024ஆம் ஆண்டிற்குள் ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கிடவும், தேவையான அளவிலும் நிர்ணயிக்கப்பட்ட BIS 10500 தரத்திலும் வழக்கமான மற்றும் நீண்ட காலத் தேவைக்கு ஏற்பக் குறைந்த குடிநீர் சேவை கட்டணத்துடன் குடிநீர் விநியோகம் செய்வதே ஜல்ஜீவன் இயக்கத்தின் நோக்கமாகும்.

ஜல்ஜீவன் திட்டத்தின்கீழ் இதுவரை கிராமப் புறங்களின் 7151339 வீடுகளுக்கு ரூ.2,123.36 கோடியில் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இப்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சி இந்தியாவிற்கே வழிகாட்டும் மகத்தான திட்டங்கள் பலவற்றைச் சிறப்பாக நிறைவேற்றி வெற்றி கண்டு வரலாறு படைத்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

---

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம், மயிலாடுதுறை வட்டாரங்களில்

# ரூ.1.64 கோடியில் 21 கட்டிடங்களை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. – எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*மயிலாடுதுறை, நவ. 13 -*

*மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம், மயிலாடுதுறை ஆகிய வட்டாரங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் ரூ. 1.64 கோடியில் 21 கட்டிடங்கள திறப்பு விழா நடைபெற்றது. விழாக்களுக்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி தலைமை தாங்கினார். மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் வட்டாரத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் கிளியனூர் ஊராட்சியில் ரூ.12 இலட்சத்து 67 ஆயிரம் மதிப்பீட்டில் உணவு தானியக்கிடங்கு, கோமல் ஊராட்சியில் ரூ.42 இலட்சத்து 65 ஆயிரம் மதிப்பீட்டில் கிராம செயலகம், மேக்கிரிமங்கலம் ஊராட்சியில் இளங்காரங்குடி கிராமத்தில் ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் பயணியர் நிழலகம், மேக்கிரிமங்கலம் ஊராட்சியில் ரூ. 23 இலட்சத்து 57 ஆயிரம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகம், திருவாலங்காடு ஊராட்சியில் ரூ.9 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் நியாயவிலைக் கடை, திருவாலங்காடு ஊராட்சியில் ரூ.23 இலட்சத்து 57 ஆயிரம் மதிப்பீட்டில் ஊராட்சிமன்ற அலுவலகம், மாதிரிமங்கலம் ஊராட்சியில் ரூ.9 இலட்சத்து 32 ஆயிரம் மதிப்பீட்டில் உணவு தானியக் கிடங்கு, மயிலாடுதுறை வட்டாரம் மூவலூர் ஊராட்சியில் ரூ.22 இலட்சத்து 65 ஆயிரம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகம், மயிலாடுதுறை ரூரல் பகுதியில் ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையம் என மொத்தம் ரூ.1 கோடியே 64 இலட்சத்து 93 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்ட 21 புதியகட்டிடங்களை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார்கள்.*

*பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தசிவ.வீ.மெய்யநாதன் கோமல் ஊராட்சியில் கிராம செயலக கட்டிடத்தை திறந்து வைத்து பேசுகையில்:- முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்பேரில் பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகள் திறக்கப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பொறுப்பில் இருந்த போது, 2006 2011 ஆட்சிக்காலத்தில் உள்ளாட்சித்துறை அமைச்சராகவும், துணை முதலமைச்சராகவும் இருந்த தற்போதைய முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 12,524 ஊராட்சிகளிலும் பல்வேறு திட்டப் பணிகளை கொண்டு வந்து, தார் சாலைகள், சிமெண்ட் சாலைகள், அனைத்திந்திய அண்ணா கிராம திட்டத்தின் மூலம் அனைத்தையும் நிறைவேற்றித் தந்தவர். அந்த அடிப்படையில், ஊராட்சியில் இருக்கக்கூடிய மக்களின் பிரச்சினைகளான குடிநீர், சாலை வசதி, ஊராட்சி மன்ற தலைவருக்கு ஒரு அறை, செயலாளர் அறை, கிராம நிர்வாக அலுவலர் அறை, கூட்டரங்கு என்ற ஒரு அறை, இதற்கு கூடுதலாக இண்டர்நெட் போன்ற வசதிகளை செய்து, இதுபோல் ஒரு திட்டத்தை இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டில் திட்டத்தை நிறைவேற்றியவர் நம் தமிழ்நாடு முதலமைச்சர்.*

*கோமல் ஊராட்சியை பொறுத்தவரை 10,000 எண்ணிக்கையுடைய இந்த ஊராட்சியில் மக்களின் சாலை வசதிகள் போன்ற பல்வேறு வசதிகளை நிறைவேற்றி தந்துள்ளனர். இந்தாண்டு வரக்கூடிய கிராம சாலை திட்டத்தின் கீழ் இங்கு இருக்கக்கூடிய சாலையை தார்ச்சாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசு மேல்நிலைப் பள்ளியில் உள்ள ஒட்டுக்கட்டிடம் எந்த பாதிப்பும் இல்லாமல் இருக்கின்றது. அதை மறுசீரமைக்கும் பணிகளும் அதையும் நிறைவேற்ற உள்ளார்கள். குத்தாலம் ஒன்றியத்தில் கிளியனூர், கோமல், மேக்கிரிமங்கலம், திருவாலங்காடு, மாதிரிமங்கலம்; ஆகிய ஊராட்சிகள் மற்றும் மயிலாடுதுறை ஒன்றியத்தில் மூவலூர், மயிலாடுதுறை ரூரல் ஆகிய பகுதிகளில் ரூ.1 கோடியே 64 இலட்சத்து 93 ஆயிரம் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகள் இன்று திறந்து வைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.*

*கடந்த 10 ஆண்டுகளில் நிறைவேற்றப்படாமல் உள்ள திட்டங்களை செயல்படுத்தி அதை எல்லாம் இன்றைக்கும் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி தந்திருக்கின்றார்கள். பெண்களுக்கான கட்டணமில்லா விடியல் பேருந்து பயணம் பல கோடி பேர் பயணித்திருக்கின்றார்கள். மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, இன்னுயிர் காப்போம், நம்மை காப்போம், கலைஞரின் கனவு இல்லம் ஒரு வீட்டிற்கு ரூ.3 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் 1 இலட்சம் வீடுகள் என ரூ.3500 கோடி ஒதுக்கீடு செய்து ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வருகின்றது, அதுபோல், 21 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை தந்து அடித்தட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்காக செயல்படுத்திக் கொண்டிருப்பவர் தான் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். உலக வரலாற்றில் எந்த மாநிலத்திலும் செய்யாத அளவிற்கு கிட்டத்தட்ட 1 கோடியே 15 இலட்சம் குடும்பத்தலைவிகள் பயன்பெறும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை மாதம் 1000 வழங்கப்பட்டு வருகிறது. இப்படி ஏழை, எளியவர்கள் கல்வியில், மாவட்ட கழகப் பொருளாளர் மகா அலெக்சாண்டர் பொருளாதாரத்தில், சமூகத்தில் உயர்வதற்கு திட்டங்களை தந்தவர் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினர்.*

*நிகழ்ச்சிகளில் மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இராம.இளங்கோவன், முத்து.மகேந்திரன், ஜி.என். ரவி, மாவட்டக் கழகத் துணை செயலாளர் மு. ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், மாவட்டக் கழகப் பொருளாளர் மகா அலெக்சாண்டர்,தகவல் தொழில்நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மங்கை எம்.சங்கர், என்.இளையபெருமாள், மூவலூர் எம்.மூர்த்தி, பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், ஞான.இமையநாதன், பஞ்சு.குமார், அமிர்த.விஜயகுமார்,*

*ப.முருகமணி, ஏ.ஆர். ராஜா, அமிர்த.விஜயகுமார் ஏ.ஜி.ஜெ.பிரபாகரன், கு.வைத்தியநாதன், நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என். செல்வராஜ், ம.சுப்பராயன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், நத்தம் ஏ.வின்சென்ட், அ.காந்தி, எஸ்.சங்கரநாராயணன், குத்தாலம் பேரூர் செயலாளர் எம்.சம்சுதீன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே.மருது, ராஜ்குமார். ஆர்.எஸ்.ஸ்ரீதர், சாந்தி, வி.எஸ்.பிரபாகர், ஆர்.மனோகரன், வெடி எஸ்.பாலமுருகன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோசி.மதி. திருமாவளவன், சௌ.சர்வோதயன், ஒன்றியக் குழு தலைவர்கள் கே.மகேந்திரன், காமாட்சி மூர்த்தி, கமலஜோதிதேவேந்திரன், மற்றும் ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் மாவட்ட தி.மு.க. சார்பில் நிர்வாகிகள், பல்வேறு அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

---

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; ராஜஸ்தான் மாநிலத்தில் கல்லூரிச் சுவர்களுக்கு ஆரஞ்சு வண்ணம் பூச அந்த மாநில அரசு உத்தரவிட்டுள்ளதாமே ?

**பட்டணம் :** **ஆமாமய்யா; இது கல்வியைக் காவி மயமாக்கும் முயற்சி எனக் காங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளது. இப்படியே போனால், ஒரே நாடு, ஒரே உடை என்று சொல்லும் பா.ஜ.க., இந்தியக் குடிமக்கள் அனைவரும் காவி உடைதான் அணிய வேண்டும் என்று கட்டாயப் படுத்தவும் செய்வார்கள்.**

**காவி, ஆவியாகிக் கலையும் வரை, காவியின் கோர நர்த்தனம் ஓயாது !**